# பாரதீய வித்யா பவன்

## கோவை மையம்

# மகாகவி பாரதியார்
# 100ஆவது நினைவு ஆண்டு




## மகாகவி பாரதியார்
## திருவுருவச்சிலை திறப்பு விழா

அன்புடையீர்,

பாரத தேசத்தின் விடுதலை வேள்வியைப் பாக்களால் வார்த்துக்கொடுத்த அக்கினிப்பிழம்பு மகாகவி. தன்னை ஒருநாளும் நினைக்காது தேச விடுதலையை மட்டுமே முன்னிறுத்தியவர். எட்டயபுரத்தில் 11.12.1882-இல் பிறந்து 11.09.1921 வரை வாழ்ந்து 39 வயதுக்குள் முக்காலத்தையும் தன் எழுத்தில் கொண்டுவந்த அமரகவி. பாரதி என்னும் ஆளுமை இந்த பாரத தேசத்தின் அடையாளம். புரட்சி என்னும் சொல்லை மட்டுமல்ல, அதன் பொருளையும் இந்த தேசத்திற்கு அறிமுகம் செய்த தேசியக்கவி இவர். தமிழ், ஆங்கிலம், வங்காளம், சமஸ்கிருதம், பிரெஞ்சு, அரபு, ஹிந்தி ஆகிய மொழிகளைக் கற்றுணர்ந்த, தமிழை மறவாத மகாகவி. 1893-ஆம் ஆண்டு தனது 11-ஆவது வயதில் இவருடைய கவிப்புலமையைப் பாராட்டி எட்டயபுர மன்னர் இவருக்கு 'பாரதி' என்ற பட்டத்தை வழங்கினார். வளமான, வலிமையான பாரதத்திற்குத் தேவையான சிறந்த வழிகள் யாவும் அவருடைய பாடல்களில் உள்ளன. அவற்றைப் பின்பற்றினால் பாரதி கண்ட பாரதத்தை நம்மால் உறுதியாக உருவாக்க முடியும்.

நிகழ்ச்சி நிரல்

தலைமை

**டாக்டர் பி.கே. கிருஷ்ணராஜ் வாணவராயர்** அவர்கள்
தலைவர், பாரதீய வித்யா பவன், கோவை மையம்

சிறப்புரை

**பேரா. முனைவர் கிருங்கை சேதுபதி** அவர்கள்
தமிழ்த் துறைத் தலைவர், பாரதிதாசன் அரசு மகளிர் கல்லூரி, புதுச்சேரி

நாள் : 14.11.2022 (திங்கட்கிழமை)

நேரம் : காலை 09.30 மணி

இடம் : பவன் மெட்ரிகுலேசன் மேல்நிலைப் பள்ளி
பேரூர் சாலை, அஜ்ஜனூர், கோயம்புத்தூர்

இவ்வினிய நிகழ்ச்சியில் தாங்கள் அனைவரும் கலந்துகொண்டு சிறப்பிக்குமாறு அன்புடன் வேண்டுகிறோம்.

இங்ஙனம்,
டாக்டர் பி.கே. கிருஷ்ணராஜ் வாணவராயர்
மற்றும் நிர்வாகக்குழு உறுப்பினர்கள்

---

காலை 09.30 மணிக்கு பவன் பள்ளி மாணவர்கள் பாரதியார் பாடல்களை இசைக்க இருப்பதால் அனைவரும் குறித்த நேரத்தில் இருக்கையில் அமர்ந்திருக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

---

